# வேலை வாய்ப்பு அறிவிப்பு
# மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம், நாகர்கோவில்.

கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்ற தலைவர் அவர்களது அதிகாரத்திற்கு உட்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் காலியாக உள்ள ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு தகுதி வாய்ந்த நபர்கள் தேர்வு செய்வதற்கு மாண்புமிகு சென்னை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் பேராணை எண்.Rc.No.A1/909/2018 நாள் 11.04.2018-ல் வழங்கப்பட்டுள்ள உத்தரவின்படி, அரசாணைக்குட்பட்டு கல்வி தகுதி, வயது மற்றும் பிற தகுதிகள் பெற்றிருக்கும், கீழ்க்கண்ட இனசுழற்சி முறையில் உள்ளவர்கள் மட்டும் இத்துடன் கண்டுள்ள விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து பதிவு தபால் மூலம் தலைவர், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் அவர்களுக்கு 18.01.2019 தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும்.

| வ.எண். | இனச்சுழற்சி | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பொதுப் போட்டி முன்னுரிமை பெற்றவர் | அலுவலக உதவியாளர் | 1 |

1.குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது.

2.மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ,நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ தலைவர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது.

3.மேற்படி நேர்காணலுக்கு பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

4.இனச்சுழற்சி முறையில் உள்ளவர்கள் தவிர மற்றவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

தலைவர்
மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்,
பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி சாலை,
நாகர்கோவில் - 629 001.
கன்னியாகுமரி மாவட்டம்.

**அலுவலக உதவியாளர் பணிக்கான கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பு**

1. 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. 01.07.2018 அன்று வயது வரம்பு
   1.SCA - 18-35
   2.SC - 18-35

| | | |
|---|---|---|
| 3.ST | - | 18-35 |
| 4.MBC | - | 18-32 |
| 5.BC | - | 18-32 |
| 6.OC | - | 18-30 |

அலுவலக உதவியாளர் பணிக்கான ஊதிய விகிதம்
**(ரூ. 15700-50000)**

**முன்னுரிமை பெற்றவர்கள்:-**
ஆதரவற்ற விதவை, கலப்பு திருமணம் செய்தவர், இராணுவத்தில் பணியில் இருப்பவர்/முன்னாள் படைவீரர் சார்ந்து இருப்பவர்கள், இலங்கை/பர்மா அகதிகள், நில ஆர்ஜிதத்தால் பாதிக்கப்பட்டவர், தமிழ் மொழி காவலர்கள்/சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசு, மாற்று திறனாளிகள்.

விண்ணப்பதாரர்கள் முன்னுரிமை பெற்றவர் என்பதற்கான சான்றிதழ் நகல் விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

**தலைவர்**
மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்,
நாகர்கோவில்.

# <u>விண்ணப்ப படிவம்</u>

பாஸ்போட் சைஸ் போட்டோ

1. பெயர் :
2. தகப்பனார்/கணவர் பெயர் :
3. வயது :
4. பிறந்த தேதி :
5. நிலையான முகவரி :
6. விண்ணப்பிக்கும் பதவி :
7. கல்வித் தகுதி :
8. வாகன ஓட்டுநர் போன்ற மற்ற தகுதிகள் :
9. இன சுழற்சி (BC,OC,MBC, SC மற்றும் ST)
10. எந்த அடிப்படையில் விண்ணப்பதாரர் முன்னுரிமை பெற்றவர் (priority) :
11. விண்ணப்பதாரர் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) அல்லது குற்ற வழக்கு நிலுவையில் உள்ளதா? ஆம் எனில் அதன் விபரங்கள் :

மனுதாரரின் கையொப்பம்.

நாள் :
இடம் :

**<u>குறிப்பு:-</u>**

விண்ணப்பத்துடன் கல்வித் தகுதி, வயது, முகவரி மற்றும் சாதி சான்றிதழ் ஆகியவற்றிற்கான ஆவணங்களின் நகல்கள் சான்றொப்பம் செய்து அனுப்பப்பட வேண்டும். **<u>விண்ணப்பங்கள் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.</u>**

விண்ணப்பதாரர் முன்னுரிமை பெற்றவர் என்பதற்கான சான்றிதழ் நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

## விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்.

1.விண்ணப்பங்கள் அதற்கான படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, பதிவு தபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. புகைப்படத்தை விண்ணப்பத்தில் அதற்கென குறிப்பிட்டுள்ள இடத்தில் ஒட்ட வேண்டும். புகைப்படத்தின் மேல்புறம் சுய சான்றொப்பமிட வேண்டும். புகைப்படத்தை விண்ணப்ப்த்தில் பின் அடித்து இணைக்கக்கூடாது.

3. உரிய முறையில் சுய சான்றொப்பமிட்ட தேவையான சான்றாவணங்களின் நகல்களை மட்டுமே விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கப்படக்கூடாது.

4. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

5. அனைத்து தகவல் பரிமாற்றங்களும், தேர்வு நேர்காணலுக்கான அழைப்பு மற்றும் தேர்வு விபரம் https://kanniyakumari.nic.in என்ற இணையதள வலைதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். வேறு எந்த வகையான முறையிலும் விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் தெரிவிக்கப்படமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர்கள் தொடர்ந்து மேற்கூறிய இணையதள வலையத்தை தொடர்ந்து கவனித்து தகவல்களை அறிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

6. விண்ணப்பதாரர்களின் இருப்பிட சான்றுகளை கீழே குறிப்பிட்டுள்ள புகைப்படத்துடன் கூடிய ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் புகைப்பட நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். (ஓட்டுநர் உரிமம், பான் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை)

7. விண்ணப்பதாரர்கள் முன்னுரிமை பெற்றவர் என்பதற்கான சான்றிதழ் நகல் விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

**தலைவர்**
மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்,
நாகர்கோவில்.